# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

### புத்தொளி பாய்ச்சிய புதுவை

அன்பார்ந்த தோழர்களே,

BSNLல் நடைபெற உள்ள 7ஆவது சங்க உறுப்பினர் சரிபார்ப்பு தேர்தலையொட்டி புதுவை மாவட்ட BSNLEU & SNATTA சார்பாக பிரச்சாரக் கூட்டம் BSNL ஊழியர் சங்க அமைப்பு தினமான மார்ச் 22ஆம் தேதி சிறப்பாக நடைபெற்றது. BSNL ஊழியர் சங்க மாவட்ட தலைவர் தோழர் S.சங்கரன் மற்றும் SNATTA மாவட்ட தலைவர் தோழர் G.முருகன் ஆகியோர் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் பங்கேற்ற நூற்றுக்கும் மேற்பட்ட தோழர்களை BSNL ஊழியர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் தோழர் A.சுப்ரமணியன் வரவேற்று பேசினார். SNATTA மாவட்ட செயலாளர் தோழர் D.மணிக்கண்ணன், BSNL ஊழியர் சங்க மாநில செயலாளர் தோழர் A.பாபு ராதாகிருஷ்ணன், அகில இந்திய உதவி பொது செயலாளர் தோழர் S.செல்லப்பா மற்றும் நமது பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

உயர்வான ஊதியம், உன்னதமான பதவி உயர்வு, ஓய்வூதிய மாற்ற உத்தரவாதம், ஒரு சதவிகித பங்கினைக் கூட விற்காமல் BSNLஐ பாதுகாக்கும் BSNL ஊழியர் சங்கம், 2017 ஊதிய மாற்றத்தில் நல்லதொரு ஊதியத்தை பெற்று, உயர்வான ஓய்வூதியத்தையும் உத்தரவாதப்படுத்தும் என நமது பொதுசெயலாளர் தனது சிறப்புரையில் தெரிவித்தார். மேலும் அங்கீகார தேர்தல் முடிந்தவுடன், நல்லதொரு PLI திட்டத்தை இறுதிப்படுத்தும் என அவர் உறுதி அளித்தார்.

இந்த சிறப்புக்கூட்டத்தில் மாநில பொருளாளர் தோழர் K.சீனிவாசன், TNTCWU மாவட்ட செயலாளர் தோழர் B.மகாலிங்கம், AIBDPA மாவட்ட செயலாளர் தோழர் P.சக்திவேல் உள்ளிட்ட தோழர்கள் பங்கேற்றனர். இந்தக் கூட்டத்தை SNATTA மாவட்ட செயலாளர் தோழர் D.மணிக்கண்ணன் நன்றி கூறி முடித்து வைத்தார். இந்தக் கூட்டம் புதுவைக்கு ஒரு புத்தொளி பாய்ச்சியுள்ளது என்றால் அது மிகையாகாது. சிறப்பானதாக பங்கு பெற்ற அனைத்து தோழர்களுக்கும் தமிழ் மாநில சங்கத்தின் பாராட்டுக்கள்.




சிறப்புக் கூட்டம்
BSNL
BSNLEU


சிறப்புக் கூட்டம்
BSNL
BSNLEU

